விளம்பி வ்ஷ கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2018

ஶ்ரீ:

மலர்: 1
இதழ்: 8

ஶ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஶ்ரீ ஶ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்






**MONTHLY NEWSLETTER FROM:**

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





திவ்ய தம்பதிகள் நவராத்ரி சேர்த்தி

ஸ்ரீ:

விளம்பி ஹு கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2018

மலர்: 1
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்ய நாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Sudhakar Thirumalai
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004, போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^3$ரி ஸமம் ஸ்தா$^2$நம் ப்$^3$ரஹ்மாண்டே$^3$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^3$வோ ந பூ$^4$தோ ந ப$^4$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

‘புயலுக்குப் பின் அமைதி’ - இது மூதுரை. நமக்கும் பொருந்தும். பெரு மழையும் புயலும்போல, ஸ்வாமி தேசிகனின் 750-வது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் நம்மை இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்தன. அதன் பின்நினைவுகள் இன்றுபோல் ‘அண்ணிக்கும் அமுதூறும்’ நம் நெஞ்சுக்கே!

நிறுத்துப் பார்க்கில், துலாமாதம் சற்றே ஓய்வுக்காலம் போலும். ஆம், அநுபவங்கள் ஊறுவதற்கு அவகாசம் வேண்டாமா! இதை வைத்து, இத்திங்களில் உத்ஸவங்கள் ஏதுமில்லை என எண்ணிவிடலாகாது. நவராத்ரி நிறைவுப் பகுதி உத்ஸவங்கள் இம்மாதத்தை நலமுற அலங்கரித்தன.

மூன்றாவதாகத் தோன்றியவராயினும், இவ்வருடம் முதலில் திருநக்ஷத்ரம் கண்ட நம்மூர் நாயகனான பேயரின் வார்ஷிகோத்ஸவம் ‘சேயை (ஸ்வாமி தேசிகனை) சிங்காரித்துவிட்டு, பிறகு தான் அலங்கரித்துக்கொள்ளும் தாயின் உள்ளத்தை’ ஒத்திட்டிருந்ததை அடியார்கள் ஆனந்தத்துடன் அநுபவித்தனர்.

‘பிள்ளைக்குழா விளையாட்டொலி’ மிகுந்து ‘வேத ஒலியும் விழாஒலியும்’ சேர்ந்து ஒளிர்ந்த தீபாவளி உத்ஸவம், உள்ளத்துக்கு உவகையூட்டுவதாக அமைந்தது.

தீபாவளி ‘நாளும் கடந்த இரண்டா நாள்’, ‘மத்த மாமலை தாங்கிய மைந்தனை உத்தானம் செய்து உகக்கும்’ விழாவான அன்னகூட உத்ஸவத்தின் அமுது இனிதா? அதற்கேற்ற ஆயன் திருக்கோலம் இனிதா? - என, ஸேவித்தோரை விருப்புற்றுக் கேட்கின்றேன்.

வழக்கமான பஞ்சபர்வ உத்ஸவங்களும், எம்பெருமானின் தானைத் தலைவரான ஸேனை முதலியாரின் வார்ஷிக உத்ஸவமும், இம்மாதத்தோடு நம் மனதையும் நிறைத்தன.

வைத்து ரஸிக்க, கீழ்க்கூறிய விழாக்களின் நிழற்படங்களுடன், வழக்கமான கட்டுரைகளோடு கார்த்திகை மாத இதழ், இதோ உங்கள் கையில்...

# கவிதார்க்கிக ஸிம்ஹம் கண்ட ந்ருஸிம்ஹம்

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்





ஸநாதந தர்மம் மிகவும் உயர்ந்தது. ஈடு இணை இல்லாதது. ஸநாதந தர்மத்தை நிர்மாணித்தவனான ஸ்ரீமந்நாராயணன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஸ்ரீவைஷ்ணவம் என்பது 'வைஷ்ணவர்கள்' என்று அழைக்கப்படும் எம்பெருமானின் அடியவர்கள் வாழும் வாழ்க்கை முறையாகும். மிகவும் உயர்ந்ததான இந்த நெறியானது, குறையொன்றும் இல்லாத ஸ்ரீமந்நாராயணனின் பரிபூர்ண அநுக்ரஹத்தினாலே அமையப் பெறுகின்றது. ஸ்ரீவைஷ்ணவம் கொண்டாடும் ஸ்ரீமந்நாராயணனானவன், அயர்வறும் அமரர்கள் அதிபதியாவான். தசவிதமான அவதாரங்களினைக் கொண்டு, உயர்நிலை பக்தியாம் சரணாகதி தத்வத்தின் மஹிமையினை, பூர்வாசார்யர்கள் மூலமாக நமக்கு தெள்ளத் தெளிவுற அநுக்ரஹம் பண்ணினவன் ஸ்ரீமந்நாராயணன்.

உயர்வற உயர்நலம் உடையவனான அந்த ஸ்ரீமந்நாராயணன் கொண்ட தச விதமான அவதாரங்களில் ந்ருஸிம்ஹாவதாரம் மிகவும் ஏற்றம் உடையது. ந்ருஸிம்ஹாவதாரத்தினைப் போற்றும் க்ரந்தங்களும் புராணங்களும் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தில் ஏராளமாக உள்ளன. நாம் நமது கிருஹங்களில் நித்தம் அனுஷ்டிக்கும் ஸஹஸ்ரநாமத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை தூணிலும் துரும்பிலும் நிறைந்து நின்றவனான ந்ருஸிம்ஹன் பரவி நிற்கின்றான்.

ஜீவாத்மாக்களாகிய நாமெல்லாம் உய்ய வேண்டுமென்ற கருணையினால், நமது ஆசார்ய சிரோன்மணி ஸ்வாமி தேசிகன், ஸ்ரீகாமாஸிகாஷ்டகம் மற்றும் ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் ஆகியவற்றை ஸாதித்தருளியுள்ளார். இந்த இரண்டும் ந்ருஸிம்ஹனின் பெருமையைப் பரக்கப் பேசுகின்றன.

**தசாவதார ஸ்தோத்ரத்தில் ந்ருஸிம்ஹாவதாரம்**

ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் தசாவதார ஸ்தோத்ரத்தில் ந்ருஸிம்ஹனைப் பற்றின ச்லோகமானது அர்த்த

புஷ்டியான பொருளினைக் கொண்டது.

*ப்ரத்யாதிஷ்ட புராதந ப்ரஹரண க்ராம: க்ஷணம் பாணிஜை:*

*அவ்யாத் த்ரீணி ஜகந்த்யகுண்ட மஹிமா வைகுண்ட கண்டீரவ: |*

*யத் ப்ராதுர்பவநாத் அவந்த்ய ஜடரா யாதிருச்சி காத் வேதஸாம்*

*யா காசித் ஸஹஸா மஹாஸுர க்ருஹ ஸ்தூணா பிதாமஹ்யபூத் ||*

அவந்த்ய ஜடரா என்று இங்கு ஆசார்யன் ஸாதிப்பது ''மலட்டுத் தன்மை இல்லாத வயிறு'' என்ற அர்த்தத்தினைக் கொடுக்கிறது. எம்பெருமான், ந்ருஸிம்ஹாவதாரத்தின் போது அண்ட சராசரங்களிலும், ஒரு அணுவினை லட்சம் கூறுகளாகப் பிளந்தால் வரும் சிறு கூறுகளினுள் எல்லாம் ஒளிந்து கொண்டிருந்தானாம். ஆனால் அவன் ஆவிர்பவித்ததென்னவோ அந்த ஒரே ஒரு தூணிலிருந்து மட்டும் தான். அதனால் அவந்த்ய ஜடரா -- மலட்டுத் தன்மை இல்லாத வயிற்றினைக் கொண்டது அந்தத் தூண் என்று ஸாதித்தருள்கிறார்.

அப்படி மலட்டுத் தன்மையில்லாத வயிற்றினைக் கொண்டிருந்ததனால் தான் அந்தத் தூணானது, இன்ன ரூபம் தரிப்பது என்றறியாது திடீரென்று உண்டான போதும், நினைத்துப் பார்க்கவும் முடியாத வேகத்தில் ந்ருஸிம்ஹனை ஈன்றதாம். எவ்வளவு ரஸனையான அனுபவம் இது. இந்த ச்லோகத்தில் இருக்கும் இன்னொரு அழகான வார்த்தைப் பிரயோகத்தை அநுபவிக்கலாம்.

வேதஸாம் பிதாமஹ்யபூத் – ''அனைத்தையும் படைப்பவர்களாகிய ப்ரம்ஹாக்களுக்கே அந்தத் தூணானது தகப்பனைப் பெற்ற பாட்டி முறை ஆயிற்று'' என்று ஸாதிக்கிறார் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன். படைப்பினைத் தொழிலாகக் கொண்ட ப்ரஹ்மனைப் படைத்தது ஸ்ரீமந்நாராயணன். அந்த ஸ்ரீமந்நாராயணனையே ஈன்றெடுத்ததாம் அந்தத் தூண். அதனால் அது ப்ரஹ்மனுக்குப் பாட்டி முறையாயிற்றாம். எவ்வளவு ரஸமான ஒப்புமை!

ந்ருஸிம்ஹனைப் போலவே ந்ருஸிம்ஹாவதாரமும் பேரழகு. அதுவும் கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் திருவாக்கானது, ந்ருஸிம்ஹாவதாரத்தின் அழகிற்கு மேலும் மெருகூட்டுவதாய் அமைகிறது.

**காமாஸிகாஷ்டகத்தில் ந்ருஸிம்ஹாவதாரம்**

சின்ன காஞ்சீபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள திருவேளுக்கை என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஆளரியாம் ந்ருஸிம்ஹனை, ஸ்வாமி தேசிகன் காமாஸிகாஷ்டகம் என்கிற ஸ்தோத்ரம் மூலமாக ஸேவிக்கிறார். மொத்தம் எட்டு ச்லோகங்களைக் கொண்டு ந்ருஸிம்ஹனை ஸ்துதி பண்ணும் கவிதார்க்கிக ஸிம்ஹம், ஒன்பதாவதாக ஸாதித்திருப்பது பலச்ருதி. எட்டாவது ச்லோகத்தின் அர்த்தம் மிகவும் விசேஷமானது. நம் அன்றாட வாழ்க்கையை உள்ளங்கை நெல்லிக்கனியாக அறுதியிட்டுக் காட்டுகிறது. அதுவும் கவிதார்க்கிக ஸிம்ஹம் ஸாதித்தருளின இந்த வரியானது, ஸ்ரீமந்நாராயணன் திருவடிகளாகிய நம் எல்லோருடைய ஆகிஞ்சந்யத்தையும் (இயலாமையையும்) நமக்கெல்லாம் உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது.

*த்வயி ரக்ஷதி ரக்ஷகை : கிமந்யை: த்வயி ச அரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை: |*

இதன் பொருள் – ''ந்ருஸிம்ஹா! நீ என்னை ரக்ஷிப்பது என்று ஸங்கல்பித்துவிட்டால், வேறு

## தேசிக மொழி

திருவரங்கப் பெருமானுடைய திருக்கைகள் கண்டவர் மனதை கொள்ளைகொள்ளும் பேரழகு வாய்ந்தவை. வேண்டுவோர்க்கு வேண்டும் பலன்கள் அனைத்தையும் வாரி வழங்க வல்லனவாக விளங்குகின்றன. அந்தத் திருக்கைகளில் வளையல் அணிந்த வடுக்களும், விபவாவதாரத்தில் எதிரிகளை அழிக்க வில்லேந்திய நிலையில் நாண்கயிறு அழுந்திய தழும்புகளும் தெரிகின்றன. அத்திருக்கைகள், பெரியபிராட்டி உறையும் திருக்கோயிலாகிய திருமார்புக்குப் பாதுகாப்பான பெரிய தாழ்ப்பாள் போல் உள்ளன. அந்தத் திருக்கைகளில் ஏந்திய திருவாயுதங்களைக் கண்டாலே அடியவர்களின் அச்சமெல்லாம் ஒழிந்து போகும்.

– பகவத் த்யாந ஸோபாநம்

## தேசிக மொழி

**திருவரங்கனுடைய தாமரை போன்ற திருவடிகளை எல்லையற்ற வேதங்கள் எப்பொழுதும் புகழ்ந்துகொண்டே இருப்பதால் அந்த வேதங்களின் மணம் இடையறாது இந்தத் திருவடிகளில் வீசுகின்றது. வரையறையின்றி எல்லோரும் ஓதுவதற்கு உரிய, ஆழ்வார்கள் கண்ட தமிழ் மறைகளும் அவன் திருவடிகளையே பேசுவதால் அந்த மணமும் வீசுகிறது இத் திருவடிகளில்.**

**– பகவத் த்யாந ஸோபாநம்**

யாரும் என்னை காப்பாற்றவேண்டும் என்ற அவச்யம் உண்டாகாது. என்னைக் காப்பாற்றவேண்டும் என்கிற உன்னுடைய ஸங்கல்பத்தை யாராலும் தடுக்க முடியாது. நீ என்னை ரக்ஷிக்கக் கூடாது என்று ஸங்கல்பித்து விட்டால், வேறு யாராலும் என்னைக் காப்பாற்ற முடியாது''.

எவ்வளவு உயர்ந்த பக்தி நிலையிது! பரிபூர்ண சரணாகதியின் அர்த்தம் இது தானே! இவ்வளவு உயர்ந்த நிலையிலான நம்பிக்கை தானே சிறு பாலகனான ப்ரஹ்லாதனை ஆழ்வார் ஸ்தாநத்திற்கு உயர்த்தியது! அஸாத்யமான விஷயங்களையெல்லாம் சிங்க முகத்தினைத் தரித்துக்கொண்ட அந்தப் பரமனைப் பண்ண வைத்தது! இந்த உயர்ந்த நிலையிலான சரணாகதியானது பெருமாயனாம் அந்த ந்ருஸிம்ஹனையே பக்தியிலே கட்டுண்ணப் பண்ணியது.

**அடைக்கலப் பத்து பாசுரத்தில் ந்ருஸிம்ஹன்**

ஸ்வாமி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸாதித்தருளின அடைக்கலப் பத்து என்கிற ப்ரபந்தத்தில், ஸ்ரீமந்நாராயணனின் ஸாகரம் போன்ற வாத்ஸல்யத்தினை மஹோந்நதமாகப் பறைசாற்றுசாற்றுகிறார்.

*உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருகால் உரைத்தவரை*

*அமையும் இனி என்பவர்போல் அஞ்சல் எனக் கரம் வைத்துத்*

*தமது அனைத்தும் அவர்தமக்கு வழங்கியும்தான் மிக விளங்கும்*

*அமைவுடைய அருளாளர் அடியிணையை அடைந்தேனே.*

இந்தப் பாசுரத்தின் ஒவ்வொரு வரியும் ந்ருஸிம்ஹனின் எல்லையில்லாத காருண்யத்திற்கு கட்டியம் கூறுவது போன்று அமைந்துள்ளதைக் காணலாம்.

உமதடிகள் அடைகின்றேன் என்று ஒருகால் உரைத்தவரை

ந்ருஸிம்ஹா! சரணாகதின்னு உன்னுடைய திருவடிகளில் ஒரே ஒரு தடவை வந்து விழுபவர்களை வாத்ஸல்யத்துடன் நோக்கி, 'அடித்த கையைப் பிடித்த பெருமாள்' என்று பெயர் பெறும் விதமாக அரவணைத்துக் கொள்கிறாய்.

அமையும் இனி என்பவர்போல் அஞ்சல் எனக் கரம் வைத்து

''சரணாகதி என்று ஒரே ஒரு முறை சொல்லி விட்டாய். நீ கரை சேர இந்த சரணாகதியே போதும். நான் உன்னை உன் கர்மாக்களிலிருந்து மீட்டுக் கரை சேர்க்கிறேன். பயப்படாதே!' என்பதாக அபய முத்திரையை காண்பிக்கும் உயர்ந்த தெய்வம் அந்த ந்ருஸிம்ஹன். அதோடு மட்டும் நில்லாமல்,

தமது அனைத்தும் அவர்தமக்கு வழங்கியும்தான் மிக விளங்கும்

இந்த ஜகமே அவனுடையது தானே! அதனால் தானே ந்ருஸிம்ஹாவதாரத்தின் போது தூணிலும் துரும்பிலும், ஒரு அணுவினைக் கூட விட்டு வைக்காமல் அனைத்திலுமாய் நிறைந்து நின்றான்! நாமெல்லாம் அவனுடைய சொத்துக்கள். நாம் கவர்ந்து கொண்டு வந்திருக்கும் ஆத்மா அவனுடையது. 'ஆத்ம அபஹாரம்' பண்ணிக்கொண்டு (திருடிக்கொண்டு) வந்திருக்கிறோம். நம் வினைகளைக் கழிக்க, அவனது சொத்தான ஆத்மாவைக் கவர்ந்துகொண்டு வந்து தேஹம் என்கிற ஒரு உருவைக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், நம் மேல் கருணை கொண்டு, தன்னையும்

தன் வஸ்துக்களையும் நாம் அனுபவிக்க நம்மிடத்தே கொடுத்து, நாம் செய்யும் சரணாகதியை ஏற்று, அதற்கான பலனையும் உடனே அநுக்ரஹம் பண்ணுகிறான் அந்த ந்ருஸிம்ஹன்.

பலனை உடனே அநுக்ரஹம் பண்ணுவதற்கு ப்ரமாணம் ந்ருஸிம்ஹாவதாரம் தான். 'நாளையென்பதில்லை நரசிம்மனிடத்தே' என்று கூறக் கேட்கிறோம். ப்ரபத்தியின் (சரணாகதியின்) முக்கியமான அங்கமே பரிபூரணமான நம்பிக்கை தான். ''எங்கே உன் மாயாவி?'' என்று தகப்பனாம் ஹிரண்ய கசிபு கேட்டவிடத்தே, ''எங்குமுளன் என் ஹரி'' என்றானே பிரஹ்லாதன்! ''இந்தத் தூணினுள் இருக்கின்றானா?'' என்று தந்தையானவன் வினவ, ''ஆஹா. என் கண்ணுக்குத் தெரிகின்றானே'' என்று பதிலுரைக்கின்றான். 'எங்கே' என்று கேட்டவன் கண்ணுக்கு அந்தப் பரமன் தெரியவில்லை. 'எங்குமுளன்' என்று சொன்னவன் கண்ணுக்கு எல்லாவிடத்தும் தெரிந்தான். இது தான் பக்தி. இது தான் அநுபவம். இது தான் சரணாகதி.

ஹிரண்ய வதம் முடிந்த பிற்பாடு, ''ப்ரஹ்லாதா! என்ன வரம் வேண்டும் கேள்'' என்று அந்த நரஸிம்ஹவபு பாலகனிடத்தே கேட்க்கும்கால், தந்தைக்கு கதிமோக்ஷம் கேட்டதாம் அந்த தெய்வக் குழந்தை. ''தந்தேன்'' என்று சொல்லி விட்டு, ''இன்னும் கேள்; என்னவெல்லாம் வேண்டுமோ கேள்!'' என்று அந்தக் குழந்தையிடம் ந்ருஸிம்ஹன் கேட்க, ''இனிமேல் இப்படி காம்யார்த்தமாக நான் எதுவும் கேட்கக் கூடாது. அத்தகைய நல்ல புத்தியை நல்கு ந்ருஸிம்ஹா!'' என்று கூறியதாம் அந்தப் பக்குவப்பட்ட குழந்தை.

இருந்தும், ந்ருஸிம்ஹனுக்கு, அந்தக் குழந்தையின் உயர்ந்த பக்திக்கு ஈடாக எதை அநுக்ரஹம் பண்ணுவது என்று தெரியவில்லையாம். 'த்ருப்தன்' (குறையொன்றும் இல்லாதவன்) என்று பெயர் கொண்ட அந்தப் பரமனுக்கே த்ருப்தி ஏற்படவில்லையாம். அதனால், ''தமது அனைத்தும் அவர் தமக்கு வழங்கியும்'' - பொன், பொருள், பேர், புகழ், ராஜ்யம் என்று அனைத்தையும் அந்தக் குழந்தை கேட்காமலே வாரி வாரி வழங்குகின்றானாம். இவையெல்லாமே அவனுடையது தானே. அவன் தனது ஸங்கல்ப மாத்ரத்திலே எல்லாவற்றையும் அநுக்ரஹம் பண்ணவல்லவன் ஆயிற்றே!

கோரைப் பல்லும், குகை போன்ற வாயும், குருதி தடவிய திருமார்பும், கூர்மையான நகங்களையுடைய விரல்களும், அஸுரனது குடலினைப் பிடித்த இரு கையுமாய், சிங்கத்தின் தலையும் மனிதனின் உடலுமாய் விசித்ரமான உருவு கொண்டிருந்தாலும், ந்ருஸிம்ஹன் மனதினை கொள்ளைகொள்ளும் அழகினை உடையவன்.

ந்ருஸிம்ஹத்தின் அழகினை மிளிரச் செய்யும் கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் ரஸனை மிகுந்த திருவாக்கிற்கு ஈடு இணை தான் உண்டோ!

## கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

**கலியன் உத்ஸவம்** (10 நாட்கள்)
நவம்பர் 14 (புதன்) முதல் 23 (வெள்ளி) வரை

**கைசிக ஏகாதசி**
நவம்பர் 19 (திங்கள்)

**கைசிக த்வாதசி**
நவம்பர் 20 (செவ்வாய்)


**திருக்கார்த்திகை தீப உத்ஸவம்,**
**கலியன் திருநக்ஷத்ரம்**
நவம்பர் 23 (வெள்ளி)

**திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்**
நவம்பர் 24 (சனி)

**தாயார் பஞ்சமி தீர்த்த உத்ஸவம்** (9 நாட்கள்)
டிஸம்பர் 4 (செவ்வாய்) முதல் 12 (புதன்) வரை
தீர்த்தவாரி - டிசம்பர் 12 (புதன்)

**அத்யயந உத்ஸவம்** - பகல்பத்து (10 நாட்கள்)
டிஸம்பர் 8 (சனி) முதல் 17 (திங்கள்) வரை

**வைகுண்ட ஏகாதசி**
டிஸம்பர் 18 (மார்கழி 3 - செவ்வாய்)




நவராத்ரி உத்ஸவம்





















ஸ்ரீ:



பேயாழ்வார் உத்ஸவம், ச்ரவணம் புறப்பாடு




பௌர்ணமி புறப்பாடு





திருவாதிரை, புனர்வஸு ஆஸ்தானம் - ஸ்ரீராமர், குலசேகராழ்வார், ஸ்ரீ ராமாநுஜர்



ஏகாதசி, உத்திரம் புறப்பாடு

ஏகாதசி, உத்திரம் புறப்பாடு











ஹஸ்தம் புறப்பாடு











**தீபாவளி உத்ஸவம் புறப்பாடு**





வெள்ளிக்கிழமை புறப்பாடு







ஶ்ரீ:





பேயாழ்வார் திருநக்ஷத்ரம்









ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்

| விளம்பி வருட கார்த்திகை மாத பஞ்சாங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
| நவம்பர்/ டிசம்பர் | கார்த் திகை | | | | | |
| 17.11.18 | 1 | தசமி | சனி | சதயம் | மாதப்பிறப்பு – பெருமாள் திருமஞ்சனம் – மாலை வீதிபுறப்பாடு – கலியன் உத்ஸவம் 4ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாசன் |
| 18.11.18 | 2 | தசமி (14.04) / ஏகாதசி | ஞாயிறு | பூரட்டாதி | கலியன் உத்ஸவம் 5ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | |
| 19.11.18 | 3 | ஏகாதசி (16.42) / த்வாதசி | திங்கள் | உத்திரட்டாதி | கைசிக ஏகாதசி – கலியன் உத்ஸவம் 6ம் நாள் – காலை – பெருமாள் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் வீதி புறப்பாடு – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீ D. ஸாரநாதன் c/o. M.V. ஸந்தானம் |
| 20.11.18 | 4 | த்வாதசி (18.10) / த்ரயோதசி | செவ்வாய் | ரேவதி | கைசிக த்வாதசி – காலை – புராண படனம் – கலியன் உத்ஸவம் 7ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் குடும்பத்தினர் |
| 21.11.18 | 5 | த்ரயோதசி (18.19) / சதுர்த்தசி | புதன் | அச்வினி | கலியன் உத்ஸவம் 8ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் | |
| 22.11.18 | 6 | சதுர்த்தசி (17.12) / பௌர்ணமி | வியாழன் | பரணி | கலியன் உத்ஸவம் 9ம் நாள் – இரவு – கலியன் ஆஸ்தானம், ஸேவாகாலம் – பரணி தீபம், வைகானச தீபம் | |
| 23.11.18 | 7 | பௌர்ணமி (14.56) / ப்ரதமை | வெள்ளி | கார்த்திகை | திருக்கார்த்திகை – ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம் – கலியன் சாற்றுமுறை – காலை – பெருமாள், கலியன், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பொழுதுடன் ஆராதனம் – பெருமாள், கலியன், தேசிகன் வீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம் – ஸேவாகாலம், சாற்றுமுறை – தைலக்காப்பு | கலியன் உத்ஸவம் 10 நாட்களும் ஸ்ரீ C.S. பார்த்தசாரதி – திருக்கார்த்திகை திருமஞ்சனம் – ஸ்ரீ K.S. விஜயராகவன் – திருக்கார்த்திகை – ஸ்ரீ N.S. வரதாச்சாரி |
| 24.11.18 | 8 | த்விதீயை | சனி | ரோஹிணி | திருப்பாணாழ்வார் சாற்றுமுறை – மாலை – பெருமாள், ஆழ்வார் வீதி புறப்பாடு – இரவு – ஸேவாகாலம், சாற்றுமுறை | P.D.R. ட்ரஸ்ட் c/o. ஸ்ரீ இராகவன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25.11.18 | 9 | திருதீயை | ஞாயிறு | மிருகசீர்ஷம் | திருமால்வடை | |
| 26.11.18 | 10 | சதுர்த்தி | திங்கள் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 27.11.18 | 11 | பஞ்சமி | செவ்வாய் | புணர்வஸு | குலசேகராழ்வார் | |
| 28.11.18 | 12 | ஷஷ்டி | புதன் | புஷ்யம் | திருமால்வடை | |
| 29.11.18 | 13 | ஸப்தமி | வியாழன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 30.11.18 | 14 | அஷ்டமி | வெள்ளி | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 01.12.18 | 15 | நவமி | சனி | பூரம் / உத்திரம் | ஆண்டாள் | |
| 02.12.18 | 16 | தசமி | ஞாயிறு | ஹஸ்தம் | கூரத்தாழ்வான் | |
| 03.12.18 | 17 | ஏகாதசி / த்வாதசி | திங்கள் | சித்திரை | மதுரகவிகள் | |
| 04.12.18 | 18 | த்வாதசி (18.24) / த்ரயோதசி | செவ்வாய் | ஸ்வாதி | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 1ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – பத்ம வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ D.S. ராஜகோபாலன் |
| 05.12.18 | 19 | சதுர்த்தசி | புதன் | விசாகம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 2ம் நாள் – காலை – தாயார் திருமஞ் சனம் – மாலை – சூர்யப்ரபை உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. வரதாச்சாரி |
| 06.12.18 | 20 | சதுர்த்தசி (16.43) / அமாவாசை | வியாழன் | அனுஷம் | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 3ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – கருட வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ K.L.N. இராகவன் |
| 07.12.18 | 21 | அமாவசை (17.46) / பிரதமை | வெள்ளி | கேட்டை | தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 4ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – சந்த்ரப்ரபை உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.C. ஸ்ரீபதி |
| 08.12.18 | 22 | அதிதி | சனி | கேட்டை / மூலம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 1ம் நாள் – தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 5ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – கிளி வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பகல்பத்து 10 நாட்களும் – ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு – பஞ்சமிதீர்த்தம் – ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09.12.18 | 23 | த்விதீயை | ஞாயிறு | மூலம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 2ம் நாள் – தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 6ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – யானை வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | A.S.V. சாரிடீஸ் – ஸ்ரீ A.V. ஸ்ரீநிவாஸன் |
| 10.12.18 | 24 | திருதீயை | திங்கள் | பூராடம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 3ம் நாள் – தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 7ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – கஜலக்ஷ்மி வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ L.V. நரசிம்மன் |
| 11.12.18 | 25 | சதுர்த்தி | செவ்வாய் | உத்திராடம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 4ம் நாள் – தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 8ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம் – மாலை – குதிரை வாஹனம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி கமலா – சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பம் – ஸ்ரீமதி வஸந்தா வாஸுதேவன் – திருமஞ்சனம் மட்டும் |
| 12.12.18 | 26 | பஞ்சமி | புதன் | ச்ரவணம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 5ம் நாள் – தாயார் பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம் 9ம் நாள் – காலை – தாயார் திருமஞ்சனம், தீர்த்தவாரி – மாலை – தங்கக்கேடயம் உள் புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ R. ராஜ கோபாலன் |
| 13.12.18 | 27 | ஷஷ்டி | வியாழன் | அவிட்டம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 6ம் நாள் | |
| 14.12.18 | 28 | ஸப்தமி | வெள்ளி | சதயம் | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 7ம் நாள் | |
| 15.12.18 | 29 | அஷ்டமி | சனி | பூரட்டாதி | அத்யயன உத்ஸவம் – பகல்பத்து 8ம் நாள் | |

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** பாட்டீ! ஸ்வாமி தேசிகன் சரித்ரத்த 'யவநர் படையெடுப்பு'-ங்ற இக்கட்டான கட்டத்துல நிறுத்தினேளே; தேசிகன் தப்பிச் சாரா இல்லயா? அப்பறம் என்னாச்சு ?

**பங்கஜம் பாட்டி:** பெரிய பெருமாள் அநுக்ரஹத்துல, ஸ்ரீரங்கத்த விட்டு ஸ்ரீ ஸுதர்ச நஸூரியின் ச்ருதப்ரகாசிகை பட்டோலை -அவரோடரெண்டு பசங்க இவைகளோடு தப்பிச்சு, மேல-நாட்டு (கர்நாடகா) எல்லை யில் உள்ள ஸத்யா காலம்-ங்கற க்ராமத்துல சில வருஷங்கள் ஒளிந்து வாஸம் செய்து கொண்டிருந்தார்.

**ஸுமதி:** பாட்டீ! பெருமாள் - பெரிய வாளுக்கெல்லாம் கூட, ஏம்பாட்டீ இப்படி சோதனை வருது?

**பங்கஜம் பாட்டி:** இதெல்லாம் எம்பெரு மானோட லீலைதான்.

ஸுமதி: ஆமாம் பாட்டீ, 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர'-ன்னு திருப்பாவை-ல வரதே! அப்பறம், ஸத்யாகாலம்-னு சொல்லச்சே ஞாபகம் வரது - அங்க ஸந்நிதி-லதானே ஸ்வாமி தேசிகன் அர்ச்சா வதாரத்துல நின்ன-திருக்கோலத்துல ஸேவை ஸாதிக்கிறார்-ன்னு சொன்னேள்?

**பங்கஜம் பாட்டி:** ஆமாண்டீ கண்ணு; அந்த ஊர்-ல கிட்டத்தட்ட பதினாறு வருஷகாலம் தங்கியிருந்து, நெறய பேருக்கு ச்ருதப்ரகாசி கை உரையோடு ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்த காலக்ஷேபம் செஞ்சிண்டிருந்தார். அந்த சிஷ்யாள்ள ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர் அப்படீங்க்ற யதியும் இருந்தார். அவருக்கு, தேசிகன் பேர்-ல ரொம்ப பக்தி. தேசிகன் விஷயமா 'ராமாநுஜ தயாபாத்ரம்'-னு ஆரம்பிக்கிற ஸம்ஸ்க்ருத தனியனப்பண்ணி ஸமர்ப்பிச் சார். சிறந்த அர்த்தங்களைக்கொண்டதான அதை ஸ்வாமியும் ஏத்துண்டு, தன்னோட தமிழ்ப்ரபந்தங் களுக்கு தனியனா அநுஸந்திக்கும்படி சிஷ்யாளுக்கு ஆணையிட்டார்.

**ஸுமதி:** 'ஸ்ரீமந் லக்ஷ்மண யோகீந்த்ர'-ன்னு ஆரம்பிக்கிற தனியன்கூட இந்த ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரர் ஸாதிச்சதுதானே; அது, ஸ்வாமியோட குமாரர் வரதாசாரியர் பேர்-லதானே இருக்கு - எப்படி?

**பங்கஜம் பாட்டி:** ஆமாம். சாஸ்த்ரங்கள் சொல்றது - நாம எப்படி ஆசார்யரிடத்துல பக்தியோட இருக்கமோ, அதே மாதிரியே அவரோட வம்சத்தாரிடமும் இருக்கணும்-னு - அதையொட்டி ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரரும் நடந்தார். அதோட, வரதாசாரியரும் ஸ்வாமி தேசி கனைப் போலவே 'பாஷ்யகார-ஸம்ப்ரதாய'த்துல சிறந்த பாண்டித்யம் பெற்றவராக இருந்தார். அவரையும் ஆசார்யனாகப் பெற வேணும்-னு ஆசப்பட்டப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர், ஸ்வாமி தேசிகனோட அனுமதி யோட, வரதாசார்யரிடம் பகவத்-விஷய காலக்ஷேபம் பண்ணினார். அப்போ அவர் செஞ்சு ஸமர்ப்பித்த தனியன்தான் இந்த 'ஸ்ரீமந் லக்ஷ்மண யோகீந்த்ர'-ன்றது.

**ஸுமதி:** ஆசார்யரோட ரத்த-ஸம்பந்தம் கெடை க்கறது அவ்வளோ ஒசத்தியா பாட்டீ?

**பங்கஜம் பாட்டி:** பின்ன இல்லயா! இத ஒட்டி, ஒரு சரித்ரம் சொல்றேன். பாஷ்யகாரருக்கு - உறவுக்காரா/ மத்தவா-ன்னு - அநேகம் சிஷ்யாள். உதாரணமா, முதலியாண்டான்-ங்கறவர் மருமான்; எம்பார்-ங்கறவர் ஒண்ணுவிட்ட தம்பி. அப்படி உறவு ஏதும் இல்லாதவர் ஸ்ரீகூரத்தாழ்வான். இவர் பரம ஸாது / பாஷ்யகாரர்கிட்ட ரொம்ப பக்தி கொண்டவர். ஒரு ஸமயம் முதலியாண்டானும் மற்றவர்களும் 'நம் ஆசார்யனுக்கு மிகவும் பிடித்த சிஷ்யன் யார்?'-னு வேடிக்கை-வார்த்தை பேசிண்டாள். அப்ப ஒருத்தர்,

''கூரத்தாழ்வான்தான்; இதிலென்ன ஸந்தேஹம்? ஆசார்யன் எது வேணும்-னாலும் கூரத்தாழ்வானைத்தானே கூப்பிடுகிறார்'' அப்படீன்னார். இதக் கேட்ட ஆழ்வான், ''என்ன இருந்து என்ன ? உங்களப்போல ஆசார்யரோடு குடல்-துவக்கு பெற்றிலேனே!' -ன்னு சொல்லி அழ ஆரம்பிச்சுட்டாராம்.

**ஸுமதி:** பாட்டீ! நம்ம ஸம்ப்ரதாயம் எவ்வளோ ஒசந்த கொள்கைகளை யும் / பண்புகளை உடைய ஆசார்யர்களையும் கொண்டதாக இருக்கிறது; பெருமை- யா இருக்கு.

**பங்கஜம் பாட்டி:** பெருமைப்பட்டா மட்டும் போராது; நாமும் அது மாதிரியே நடந்துக்கணும். அப்பத்தான் நம்ம கீழ்க்கடைகளும் நடந்துப்பா.

**ஸுமதி:** அப்படியே பாட்டீ! கூரத்தாழ்வானை மறக்கவே முடியாது. அநத்யயனம் முடிந்து திருப்பல்லாண்டை, இவருடைய அவதார தினமான தை-மாத ஹஸ்தத்தில்தானே தொடங்குகிறோம்!

**பங்கஜம் பாட்டி:** ஸரியா சொன்னே. தேசிகன் சரித்ரத்த மேல கேளு. ஸத்யாகாலத்தில் காலக்ஷேபங்கள் நடந்துகொண்டிருந்தாலும், பெரியபெருமாளும்-நம்பெருமாளும் சேர்த்தியில் திருவாராதனம் கண்டருளப்போவது எந்நாளோ, என வருந்திக்கொண்டிருந்தார். அப்போதுதான் 'அபீதிஸ்தவம்' ஸ்தோத்ரம் பிறந்தது - எதிரிகளிடமிருந்து பயம் நீங்கி, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களோடு கூடுவது எந்நாளோ என பெருமாளை ப்ரார்த்திக்கும் ஸ்தோத்ரம் அது.

எம்பெருமானும் ஸங்கல்பித்தான். செஞ்சி நாட்டை கொப்பணார்யன் என்ற அரசன் ஆண்டுகொண்டிருந்தான்; இவன் ஸ்வாமி தேசிகனிடம் மிகுந்த பக்திகொண்டவன். தன் ஆசார்யனின் மனக் கவலையை அறிந்து அதை நீக்க, எதிரிகளை விரட்டி ஸ்ரீரங்கத்தில் அமைதி நிலவச் செய்தான். அத்துடன் நம்பெருமாளை திருமலையிலிருந்து செஞ்சிக்கு எழுந்தருளப்பண்ணி, ஒரு வருஷத்துக்கும் மேலாக ஆராதித்து மீண்டும் ஸ்ரீரங்கத்தில் திருப்ரதிஷ்டை செய்வித்தான் (இதற்கு அடையாளமாக இன்றும் செஞ்சி க்கோட்டையில் ரங்கநாதன் ஸந்நிதி உள்ளது) இதைக் கேள்வியுற்ற ஸ்வாமியும் ஸ்ரீரங்கம் எழுந்தருளி, திருவத்யயந உத்ஸவம் முதலானவைகளை சிறப்புற செய்வித்து ஆனந்தித்தார்.

ஒருஸமயம் சிற்பி ஒருவன் அந்தக்கலையில் ஸ்வாமிக்குத் தேர்ச்சி உண்டா என சோதிக்க, அவரை போட்டிக்கு அழைத்தான். ஸ்வாமியும் அவன் செய்த பீடத்துக்குப் பொருந்துமாறு தன்னுடைய உருவை வடித்து அவனுடைய திமிரை அடக்கினார். அந்த அர்ச்சா திருமேனியை, தான் தழுவி அநுக்ரஹித்து, குமாரர் வரதாச ார்யரிடம் சேர்த்து, அர்ச்சிக்கச் செய்தார். அவருக்குப் பின்பு, அந்த விக்ரஹம் திருவஹீந்திர புரத்தில்ஸந்நிதியில்எழுந்தருளப்பண்ணப்பட்டு, இன்றளவும் நாமும் ஸேவிக்கப் பெறுகிறோம்.

தன்னுடைய 90வயதிற்கும் மேற்பட்ட பிராயத்தில், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் எனும் மிகச் சிறந்த மணிப்ரவாள நூலை இயற்றினார்.

இவ்வாறு 100 திருநக்ஷத்ரங்கள் இங்கு எழுந்தருளியிருந்து ராமாநுஜ ஸம்ப்ர தாயத்தையும் அதன் உயரிய கொள்கையான சரணாகதி உபாயத்தையும் நிலைநாட்டினார். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் 120-க்கும் மேற்பட்டவையாம். ஒவ்வொன்றும் ரத்னங்கள். இவற்றுள் ஒன்றை நாம் அநுஸந்தித்தாலே, உய்ந்து போகலாம். இதனை பிள்ளைலோகாச ாரியர் எனும் அவருடைய சீடர் ஸாதித்ததை இன்றும் நாம் அநுஸந்தித்து வருகிறோம். இதோ அப்பாசுரம்:

**''சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்**
**பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஒரொன்று**
**தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு**
**வானேரப் போமளவும் வாழ்வு"**

**வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசிரியன்**
**வாழியவன் பாதாரவிந்த மலர் - வாழியவன்**
**கோதிலாத்தாள் மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்**
**தீதிலா நல்லோர் திரள்.**

சுபம்

ஸ்ரீ:



*With Best Compliments from:*


**Sridhar Parthasarathy & Family,**

**Luz Church Road,**

**Mylapore, Chennai 600004.**

**SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam


20





அன்னகூட உத்ஸவம்

